செ.வெ.எண்: 520/2016 நாள்: 11.08.2016

**<u>செய்திக் குறிப்பு</u>**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மாநில அளவில் செயல்பட்டு வரும் ஒரு நிதிக் கழகம் ஆகும். இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம். 1949-ம் ஆண்டு துவங்கப் பெற்ற இக்கழகம் மாநில் அரசின் ஆதரவுடன் இதுவரை எண்ணற்ற தொழிற்சாலைகளுக்கு கடனுதவி வழங்கி தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக திகழ்கிறது.

இக்கழகம் குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவுகளுக்கு புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கி கொண்டிருக்கும் பிரிவுகளை விரிவு படுத்துவதற்கும் உற்பத்தியை பன்முகப்படுத்துவதற்கும் பல்வேறு சிறப்புத் திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கி வருகிறது.

தற்சமயம் எமது நாகர்கோவில் கிளை அலுவலகத்தில் (முகவரி: 143,(பழைய முகவரி-37) கேப் ரோடு ஜங்சன், அருகில், நாகர்கோவில்) சிறப்பு குறு சிறு மற்றும் நடுத்தர (MSME) தொழில்களுக்கான கடன் முகாம் 17.08.2016 புதன் கிழமை முதல் 24.08.2016 புதன் கிழமை வரை (அலுவலக வேலை நாட்களில்) நடைபெற உள்ளது.

இக் கடன் முகாமில் எங்களின் பல்வேறு திட்டங்களின் சிறப்பு அம்சங்கள், மத்திய மாநில அரசுகளின் மானியங்கள், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) போன்றவை குறித்த விரிவான விளக்கங்கள் தரப்படுகிறது. மற்றும் எங்கள் சென்னை தலைமை அலுவலக உதவி பொது மேலாளர் (திட்டம்) திரு. T.S.சுகுமார் அவர்கள் 19.08.2016 வெள்ளிக்கிழமை அன்று சிறப்பு முகாமில் பங்கேற்று வாடிக்கையாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு நேரடியாக விளக்கமளிக்க உள்ளார்கள்.

எனவே இந்த நல்ல வாய்ப்பினை தொழில் முனைவோர்கள் பயன்படுத்தி தொழில் திட்டங்களுடன் வருகை தந்து தொழில் கடன் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் மானிய சேவைகளை பயன்படுத்தி கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கிளை மேலாளர்,
தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்,
நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.